# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 133/2024 |
| Deposition of Witness for | : | P.W. 8 |
| Name | : | அருண்பாண்டி |
| Father's Name | : | அர்ச்சுணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.11.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது செம்மனூரில் கிராம உதவியாளராக வேலை பார்த்து வருகிறேன். பட்டியல் சாட்சி 9 கிராம நிர்வாக அலுவலர் இளங்கோவனை தெரியும். கடந்த 09.06.2023 ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் செம்மனூர் கிராம உதவியாளராக பணிபுரிந்தபோது கல்லல் போலிசார் என்னை அழைத்தன் பேரில் நானும் கிராம நிர்வாக அலுவலர் இளங்கோவனும் செம்மனூர் பேருந்து நிறுத்தம் அருகே சென்றோம். அப்போது மணிகண்டன் என்பவரை போலிசார் பிடித்து வைத்திருந்தார்கள் அவர் கிராம நிர்வாக அலுவலர் இளங்கோவன் மற்றும் என் முன்னிலையில் வழக்கு சம்பவங்களை பற்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

2. கிருஷ்ணவர்மனை அருவாள்மனையால் வெட்டியதை ஒத்துக்கொண்டு என்னை அழைத்து சென்றால் மறைத்து வைத்திருக்கும் வழக்கு சொத்தான அருவாள்மனையை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அதன் பேரில் நானும், கிராம நிர்வாக அலுவலர் இளங்கோவன் , எதிரி மற்றும் போலிசார் பார்டியுடன் செம்மனூர் கிராமத்திற்கு சென்றோம். அவர் மாமா லட்சபாண்டி வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த அருவாள்மனையை எடுத்துக்கொடுத்தார். அதை போலிசார் மதியம் சுமார் 1.30 மணியளவில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதில் நானும் கிராம நிர்வாக அலுவலர் இளங்கோவனும் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள்மனையை தான் அன்றைய தினம் போலிசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றிய வழக்கு சொத்தாகும். அந்த **அருவாள்மனை அ.த.பொ.சா.1** ஆகும். 1வது எதிரி மணிகண்டனின் **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.4** ஆகும். அத்தாட்சியில் உள்ள **இரண்டாவது கையொப்பம் அ.த.சா.ஆ.5** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. போலிசார் யாருக்கு தகவல் கொடுத்தார்கள், என்றால் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுத்தார்கள். எத்தனை மணிக்கு தகவல் கொடுத்தார்கள் என்றால் சுமார் 11.30 மணிக்கு தகவல் கொடுத்தார்கள். எங்கள் அலுவலகத்திற்கும் பேருந்து நிறுத்தத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 20 அடி துாரம் இருக்கும். எங்கள் அலுவலகத்தின் வெளியே இருந்து பார்த்தால் பேருந்து நிறுத்தம் தெரியும் என்றால் சரிதான். எத்தனை போலிசார் நின்றிருந்தார்கள் என்றால் சுமார் 3, 4 போலிசார் இருந்தார்கள். எந்தெந்த போலிசார் இருந்தார்கள் என்றால் தேவகோட்டை காவல் ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் மற்றும் போலிஸ் இருந்தார்கள். நான் போவதற்கு முன்பே எதிரியை விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

2. நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் பேப்பர் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கணினி மூலம் தயார் செய்ததா என்றால் கையில் எழுதப்பட்ட பேப்பரில் கையொப்பம் செய்தேன். மொத்தம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரே ஒரு கையொப்பம் செய்தேன். அந்த இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் 15 நிமிடங்கள் இருந்தேன். அந்த பேருந்து நிறுத்தத்தில் தனி நபர்கள் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. 2 வது எதிரி அருவாள்மனையை எடுத்துக்கொடுத்தது எத்தனை மணிக்கு என்றால் 12.30 மணி இருக்கும். யார் யார் சென்றோம் என்றால் போலிசார் அவர்கள் வந்த ஜீப்பில் சென்றார்கள், நானும் கிராம நிர்வாக அலுவலரும் ஒரே வாகனத்தில் சென்றோம். 2 வது எதிரி லட்சபாண்டியின் வீட்டின் வாசற்படி எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்குபார்த்த வாசற்படி. 2 வது எதிரி லட்சபாண்டியின் வீடு கூரை வீடா, ஓட்டு வீடா அல்லது தார்சு வீடா என்றால் ஓட்டு வீடு.

3. வீட்டின் பின்புறம் கொல்லை வாசல் உள்ளதா என்றால் நான் பின்புறம் செல்லவில்லை. வீட்டின் முன்பாகவே நான் நின்றுவிட்டேன் என்றால் சரிதான். பொதுவாக சில வழக்குகளில் போலிசார் என்னையும் கிராம நிர்வாக அலுவலரையும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் பெறுவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் பெற்றார்கள் என்றும் பேருந்து நிறுத்தத்திற்கோ 2 வது எதிரியின் வீட்டிற்கோ செல்லக்கிடையாது என்றும் அருவாள்மனை என் முன்னிலையில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றும் நான் அரசு அலுவலர் என்பதால் போலிசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருள் 1-க்கும், அத்தாட்சி, மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.24 14:53:04 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்**

**சிவகங்கை.**